1969 செப்டம்பர் 12]

இந்த ஆய்வுக் கூடம் சேலம் தர்மபுரி மாவட்டங்களின் தேவை களை நிறைவு செய்யும்.

THIRU K. VINAYAKAM : How many acres of land will be benefited by this soil testing laboratory and what is the financial aspect of this laboratory work?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது போன்ற ஒரு ஆய்வுக்கூடம் மாத்திரம் அமைக்கவேண்டுமானால் 60 ஆயிரம் ரூபாய் செலவாகும். குறிப்பாக சேலத்திலே அமைக்கப் படுவதற்கு அவ்வளவு ஆகும் என்ற குறிப்புகள்தான் இங்கே இருக் கின்றன. பொதுவாக எத்தனை ஏக்கர் நிலத்திலிருந்து இந்தப் பரிசோதனை செய்யமுடியும் என்று சொல்லமுடியாது. ஆங்கங்கே உள்ள விவசாயிகளின் அக்கறையைப் பொறுத்து இருக்கிறது. உதாரணமாக, ஆடுதுறையை எடுத்துக் கொண்டால், அங்கே இருக் கின்ற பரிசோதனைக் கூடத்திலே ஒரு மாதத்திற்கு 1,250 சாம்பிள்ஸ் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டிருக்கின்றன. அதுமாதிரி 4,000 சாம்பிள்கள் செய்வதற்கு ஆடுதுறையில் வாய்ப்பு இருக்கிறது. எத்தனை ஏக்கர் என்று சொல்லமுடியாது. பொதுவாக விவசாயி கள் எவ்வளவு அக்கறை காட்டுகிறார்களோ, அதைப்பொறுத்துத் தான் சொல்லமுடியும்.

திரு. எம். சுரேந்திரன் : இந்த ஆய்வுக் கூடம் அமைப்பது சேலம் ஜில்லாவிலே எந்த இடத்திலே, என்ன மாதிரியான தகுதி யுள்ள இடத்திலே அமைக்கப்படும் என்று தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சேலம் ஜில்லாவில் என்று தான் இருக்கிறது. எந்த இடம் என்ற குறிப்பு இல்லை.

வெக்கை நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகள்

* 245 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம், கம்பம் வட்டாரத்தில் சுமார் 12,000 கால்நடைகளுக்கு 'வெக்கை' நோய் பரவியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதைத் தடுப்பதற்கு எடுத்துக் கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

Co-operative Sheep Credit Societies

* 246 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(a) Whether there is any proposal to introduce Co-operative Sheep Credit Societies in Dharmapuri district; and

(b) if so, when they will be started?